**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 29/2025**

**Deposition of P.W. 2**

**Name** : திருமதி.சாந்தி

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **6.03.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது குவைக்காட்டில் குடியிருந்து காளிக்கேசத்தில் உள்ள சூழல் சுற்றுலாதலத்தில் கேண்டீன் நடத்தி வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 2.3.2019 காலை 10.30 மணி அளவில் நான் கேண்டீனில் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் போது காளிகேசம் செக்போஸ்டில் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன். அப்போது அங்கு 2

நபர்களான ஜெகதீஸ் மற்றும் முருகேசன் பணியில் இருந்தார்கள். அன்றைய தினத்தில் வனப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டிருந்ததால் காட்டிற்குள் யாரையும் அனுமதிக்கவில்லை. அப்போது அங்கு டாட்டோ சுமோ வாகனத்தில் 6 நபர்கள் சமைப்பதற்கு தேவையான பாத்திரங்களுடன் வாகனத்தில் வந்தார்கள். அவர்களை விசாரித்தபோது அவர்கள் காட்டுப் பகுதிக்கு செல்வதாகவும் அதனால் செக்போஸ்டை திறந்துவிடும்படி சொல்லி பிரச்சனை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் அங்கு பணியில் இருந்த 2 நபர்களையும் அடிக்க வந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் என்னிடமும் சண்டைக்கு வந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். அப்போது 1வது எதிரி ஜெயராஜ் என்னை பார்த்து காணிக்கார நாயே சுய உதவிக்குழு கேண்டீனை மூடிவிட்டு ஓடும்படி அவமரியாதையாக பேசினார். பின்பு வாகனத்தை எடுத்துக்கொண்டு எதிரிகள் மற்ற நபர்களுடன் சேர்ந்து வாகனத்தில் அத்துமீறி உள்ளே சென்றுவிட்டார்கள். பின்பு நான் சம்பவம் குறித்து வனச்சரக அலுவலருக்கு தகவல் சொன்னேன். வனச்சரக அலுவலர் மாறாமலை பீட் வனக்காப்பாளர் முத்துபபாண்டி என்பவரை அனுப்பி வைத்தார். பின்னிட்டு விசாரணைக்காக வனச்சரக அலுவலர் சம்பவ இடத்திற்கு வந்தார். அவர்கள் என்னை மற்றும் அங்கு பணியில் இருந்த முருகேசன் மற்றும் ஜெகதீஸ் ஆகியோர்களை விசாரித்தார்கள். என்னிடம்

காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மாறாமலை பீட் வனக்காப்பாளர் என்னை விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார். (**அ.சா.2 ன் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**